ISSN : 2456-821X **அவையம் 2 (1)** 2018 P.No. : 77-82

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# லிமரைக்கூ வடிவத்தின் முன்னோடி ஐங்குறுநூற்றுப் பாடல்களே

***முனைவர் தி.அ. இரமேஷ்***
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018** **ஏற்கப்பட்டது : 03.05.2018**

*தமிழ் கவிதை வடிவம் சங்க காலம் தொடங்கி இன்று வரை பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. அவ்வகையில் தமிழ் கவிதை வடிவத்தில் யாப்பிலக்கணத்தின் செல்வாக்கு சிற்றிலக்கிய காலம் வரை மேலோங்கியும் அதைத் தொடர்ந்து மேலைநாட்டு இலக்கிய வரவின் காரணமாக யாப்பிலக்கணம் செல்வாக்கு இழந்து புதுக்கவிதையின் செல்வாக்கு மேலோங்கி காணப்படுவதும் நாம் அறிந்த ஒன்றே. இவற்றைத் தொடர்ந்து தமிழில் ஹைகூ, லிமரிக், சென்றியூ, லிமரைக்கூ போன்ற கவிதை வடிவங்கள் இடம்பெறத் தொடங்கின. இவ்வகைகளில் லிமரைக்கூ கவிதை வடிவம் ஆங்கிலத்தில் செல்வாக்குப் பெற்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வடிவத்தின் முன்னோடி பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான ஐங்குறுநூற்றுப் பாடல்கள் என்பதை நிறுவுவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## லிமரைக்கூ இலக்கணம்

புதிய அவையம்

தமிழில் முதன் முதலாக லிமரைக்கூ கவிதை நூலினை வெளியிட்ட ஈரோடு தமிழன்பன் அவர்கள் தனது நூலின் முற்பகுதியில் ''லிமரைக்கூ- ஓர் அறிமுகம்'' என்ற தலைப்பில் நீண்டதொரு ஆய்வுரை எழுதியுள்ளார். அதில் லிமரைக்கூ வடிவம் எவ்வாறு ஆக்கம் பெற்றது என்பதை, ''லிமரிக்கும் ஹைகூவும் சேர்ந்த கலப்பின கவிதை வடிவத்தை டெடபாக்கர் (Ted Pauker) என்பவர் முதன் முதலாக ஆங்கிலத்தில் உருவாக்கினார்'' என்று எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றுடன் மேலும் சில இலக்கண வரையறை களையும் குறிப்பிட்டுள்ளார். அவற்றை நோக்குதல் பொருத்தமுடையதாகும்.

- ஹைகூவின் மூன்றடி எல்லையும் லிமரிக்கின் சீர் மற்றும் பொருண்மையும் ஒன்றிணைந்ததே லிமரைக்கூ கவிதை வடிவம்
- மூன்று அடிகளில் முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் இயையுத் தொடை பொருந்தி வருதல்.
- சில இடங்களில் முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் எதுகை மோனை பொருந்தி வருதல்.

**ஐங்குறுநூறு**

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் காலத்தால் பிந்தியதாகக் கருதப்படும் ஐங்குறுநூறு வடிவ அமைப்பில் பல்வேறு வகையான புதுமைகளுக்கு வித்திட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஐங்குறுநூற்றில் மூன்றடி சிறுமையும் ஆறடி பெறுமையும் கொண்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் மூன்றடிகள் கொண்ட பாடல்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. குறிப்பாக இளவேனிற் பத்து, கிழவற்குரைத்த பத்து, புறவணிப் பத்து, ஞாழற் பத்து ஆகிய பத்துகளில் உள்ள நாற்பது பாடல்களும் பாணர்க்குரைத்த பத்தில் 1, 6 ஆம் பாடல்களும் அன்னாய்ப் பத்தில் 1, 2 ஆம் பாடல்களும் மூன்றடி பாடல்களாக இடம்பெற்றுள்ளன.



அகழ்

இப்பாடல்களில் சில, அடி எண்ணிக்கை மற்றும் 1,3 அடிகளில் இறுதி ஒத்துப்போதல் என்ற அடிப்படையில் லிமரைக்கூ கவிதை வடிவத்திற்கு முன்மாதிரியாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

இளவேனிற் பத்து, புறவணிப் பத்து ஆகிய இரு பத்துகளில் உள்ள பாடல்களில் முதல் மற்றும் மூனாறம் அடிகளின் இறுதிச் சீரில் 'ஏ'காரம் ஒன்றி வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை யின்குர லகவ
வயிர்க்கேழ் நுண்ணற னுடங்கும் பொழுதே. (ஐங்கு. 341)
நன்றே காதலர் சென்ற வாறே
யாலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையு முடைத்தே. (ஐங்கு. 437)

இப்பாடல்கள் முறையே இளவேனிற் பத்து, புறவணிப் பத்து ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இங்கு முதல், இரண்டாம் பாடலில்

முதலடி இறுதி - தன்றே, மூன்றாமடி இறுதி - பொழுதே
முதலடி இறுதி - வாறே, மூன்றாமடி இறுதி - உடைத்தே

ஆகிய சொற்களின் இறுதியில் ஏகாரம் ஒத்து காணப்படுகின்றன. இவ்வாறே லிமரைக்கூ கவிதைகளிலும் சில இடங்களில் ஈற்றெழுத்தின் மேல் நிற்கும் உயிர் எழுத்து ஒத்து வந்துள்ளதை அறிய முடிகின்றது.

மூடி விட்டான் பட்டறை
குடும்பப் பட்டினி போக்குவ தெப்படி
யோசனைக்குள் கப்பரை
தலைவர் மதில்மேல் பூனை



பதிப்பு இதழ்

*எந்தப் பக்கம் இறங்க வேண்டும்*

*எலியார் கையில் ஆணை*

*கம்பன் வீட்டுக் கட்டுத்தறி*

*கவிபாடிக் கவிபாடிக் காலப் போக்கில்*

*கம்பனுக்கே சவால்விடு எதிரி*

*இவற்றில் முதல் இரண்டு கவிதைகளில் முதல் மற்றும் மூன்றாம் அடிகளின் இறுதி எழுத்துக்களின் மேல் (பட்டறை, கப்பரை / பூனை, ஆணை) ஐகாரம் ஒன்றி வந்துள்ளதைக் காண முடிகிறது.*

*அதே போல் மூன்றாம் கவிதையில் கட்டுத்தறி, எதிரி ஆகிய சொற்களில் ஈற்றெழுத்தில் இகரம் ஒன்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*கிழவற்குரைத்த பத்தில் உள்ள அனைத்துப் பாடல்களும் முதல் மற்றும் மூன்றாம் அடிகளின் இறுதிச் சீரின் ஈற்றெழுத்து இயைந்து காணப்படுகின்றன.*

*கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே*

*வண்டற் பாவை வெளவலின்*

*நுண்பொடி யளைஇக் கடறூர்ப் போளே. (ஐங்கு. 124)*

*இப்பாடலில் முதல் மற்றும் மூன்றாமடியின் இறுதி கேளே, போளே ஆகிய சொற்களில் இறுதி ''ளே'' என்னும் எழுத்து ஒத்து வந்து இயைபுத்தொடை இடம்பெற்றுள்ளது. இதே போன்று பாணர்க்குரைத்த பத்தில் ஒரு பாடல் மட்டும் ''யே'' என்னும் எழுத்து இயைபுத் தொடையாக அமைந்துள்ளது.*

*நானிலை மன்ற பாண நீயே*

*கோணே நிலங்குவளை நெகிழ்த்த*

*கானலந் துறைவற்குச் சொல்லுகுப் போயே. (ஐங்கு. 136)*

இவற்றின் அடிப்படையில் லிமரைக்கூ கவிதை வடிவத்தை ஒப்பிட்டு ஆராயும் பொழுது அதிகப் பெரும்பான்மையான கவிதைகள் முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் ஈற்றில் எழுத்து, அசைகள் இயைபுத் தொடையாக இடம்பெற்றுக் காணப்படுகின்றன.

பறவையோடு சேர்ந்து பற
சிறகுகள் தேவை இல்லை மனிதன்
என்பதை மட்டும் நீமற

புகை பிடித்தால் இறப்பாய்
மதுகுடித்தால் இறப்பாய் இரண்டும்
விற்றால் வாழ்வில் சிறப்பாய்

இவற்றில் முதல் கவிதையில் றகரமும் இரண்டாம் கவிதையில் 'பாய்' என்னும் அசையும் இயைபுத் தொடையாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

மேலும் எதுகை, மோனை ஆகிய தொடை வகைகளும் லிமரைக்கூ கவிதை வடிவங்களில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் எதுகை பொருந்தி வரும் தன்மையில் சில ஐங்குறுநூற்றுப் பாடல்கள் காணப்படுகின்றன.

நன்றே காதலர் சென்ற வாறே
பைம்புதல் பல்பூ மலர
இன்புறத் தகுந பண்புமா ருடைத்தே. (ஐங்கு. 438)

இப்பாடலில் நன்றே, இன்புற ஆகிய சொற்களில் எதுகைத் தொடை பொருந்தி வந்துள்ளதைக் காணலாம். அதே போன்று லிமரைக்கூ கவிதைகளிலும் எதுகை இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

குறிபார்த்துச் சரியாகச் சுடு
சுடாவிட் டாலும் பரவாயில்லை



பதிப்பு அவையம்

குறியால் சுடப்பட்டு விடு

இக்கவிதையில் குறியார்த்து, குறியால் ஆகிய சொற்களில் எதுகையாக 'றி' என்னும் எழுத்து ஒன்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அடி எண்ணிக்கை, முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் இயைபுத் தொடை பொருந்தி வருதல், எதுகைத் தொடை இடம்பெறுதல் ஆகிய அடிப்படைகளில் ஐங்குறுநூற்றுப் பாடலகளே தற்கால லிமரைக்கூ கவிதைகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன. வேற்றுமொழி கவிதை வடிவமாகக் கருதப்படும் லிமரைக்கூ பழந்தமிழ் கவிதை வடிவத்தின் நீட்சி என்பதே பொருத்தமுடையது. அதேபோல் மேலைநாட்டுக் கவிஞர்களுக்கு ஐங்குறுநூற்றுப் பாடல்களே முன்மாதிரியாக அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே பெயரளவில் வேண்டுமானால் புதிய வடிவமாக கருதப்படலாம். காலத்தால் பழமையானதும் தமிழே இதன் மூலம் என்பதையும் இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**


- ஐங்குறுநூறு, பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1961.
- சென்னிமலைக் கிளியோபாத்ராக்கள், ஈரோடு தமிழன்பன், பாப்லோ பாரதி பதிப்பகம், சென்னை, 2008.